Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 22 2025

வியாழக்கிழமை 22, மே 2025 | ஒளி: 10 கதிர் 244 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## வடக்கில் காணி சுவீகரிப்பு வர்த்தமானி

# வெள்ளியன்று பேச்சு

வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் சுவீகரிப்பு தொடர்பில், மார்ச் மாதம் அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து எழுந்திருக்கும் பிணக்குகள் தொடர்பில், பாராளுமன்றத்தில், வெள்ளிக்கிழமை (23) அன்று முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலே இந்த பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் (28.03.2025) திகதியிடப்பட்டு, 2,430 இலக்கமிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக திரும்பப் பெறுமாறு அரசை வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னையின் தலைவரும் எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# தரம்-3 மாணவி விபத்தில் பலி

விஜயரத்தினம் சரவணன்




முல்லைத்தீவு, கொக்கிளாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கருநாட்டுக்கேணிப் பகுதியில், பாடசாலைக்கு அருகில், புதன்கிழமை(21) அன்று இடம்பெற்ற விபத்தில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

கருநாட்டுக்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம்-03இல் கல்விகற்கும் மாதீஸ்வரன் நர்மதா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியில் மிகவேகமாக வந்த மீன் ஏற்றும் வாகனம் சிறுமிமீது மோதியுள்ளதுடன், சிறுமி 20 தொடக்கம் 30 அடிவரையான தூரத்திற்கு வாகனத்தால் அடித்துச்செல்லப்பட்ட பிற்பாடே வாகனம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

பாடசாலைக்காக மாணவர்கள் செல்கின்ற காலை வேளையில் இந்தச் சம்பவம் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



# கெஹெலியவின் மகனுக்கு விளக்கமறியல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகனான ரமித் ரம்புக்வெல்லவை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி புதன்கிழமை (21) அன்று உத்தரவிட்டுள்ளார்.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும், அவர்களைப் பராமரிக்கவும் அமைச்சின் நிதியில் இருந்து சுமார் 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கில், ரமித் ரம்புக்வெல்ல, நீதிமன்றத்தால் சந்தேக நபராக செவ்வாய்க்கிழமை (20) அன்று பெயரிடப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

# மின்சாரம் தாக்கி 12 வயது சிறுமி பலி

கம்பளை-வெலம்பொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோவில கந்த எனும் பிரதேசத்தில் 12 வயது சிறுமி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வெலம்பொட கோவில கந்த பிரதேசத்தில் வசிக்கும், கண்டியில் பிரபல பாடசாலையில் கல்வி கற்று வந்த 12 வயதுடைய சிறுமியே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குரங்கு தொல்லை காரணமாக வீட்டுக்கு மேல் மின்சார கம்பி போடப்பட்டுள்ளது. இதன்போது சிறுமி, மாடிக்கு சென்றபோது, மின்சார கம்பியில் பட்ட அதே இடத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெலம்பொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தம்பியை அரிவாளால் கொடூரமாக பலமுறை குத்திய அண்ணன் கைது

பாலித ஆரியவன்ச

பதுளை நகர மையத்தில் உள்ள கடிகார கோபுரத்திற்கு அருகில், செவ்வாய்க்கிழமை (20) பிற்பகல் 3.30 மணியளவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், மூத்த சகோதரர், தம்பியை அரிவாளால் கொடூரமாகப் பலமுறை குத்தி காயப்படுத்தினார்.

பதுளை, அமுனுவெல்பிட்டியவில் வசிக்கும் 51 வயதான வேலு காந்தி (தம்பி), 52 வயதான வேலு உதயகுமார (அண்ணா) இருவரும் அருகருகே இரண்டு வீடுகளில் வசித்து வருவதாகவும், இருவரும் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு பெரிய கூட்டம் பார்த்துக் கொண்டிருக்கும் போது, மூத்த சகோதரர் தனது தம்பியை கொடூரமாக மீண்டும் மீண்டும் ஒரு கத்தியால் தாக்கிக் கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2



# “40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன”

நாடு முழுவதுமுள்ள அரச பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழி மூலம் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. என பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நாமலுக்கு எதிரான

# கிரிஷ் வழக்குக்கு முன் விசாரணை திகதி

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு முன் விசாரணை மாநாடு (pre-trial conference) நடத்த கொழும்பு மேல் நீதிமன்றம், புதன்கிழமை (21) தீர்மானித்தது.

இந்த விசாரணை மாநாட்டை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன, ஜூன் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

தொடர்ச்சி P2



# “உப்புக்கு தீர்வு”

உப்பு தட்டுப்பாட்டுக்கு இவ்வாரத்துடன் தீர்வு எட்டப்படும் என்று வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற நிதி சட்ட கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உப்பு தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. கடந்த ஆறுமாத காலப்பகுதிகளில் நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்குத் தற்காலிக தீர்வாக உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாளொன்றுக்கு உப்பு பயன்பாட்டுக்கான கேள்வி 500 மெற்றிக்தொன்னாக காணப்படுகிறது. உணவு பயன்பாட்டை விடவும் பல்வேறு கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு உப்பு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

தொடர்ச்சி P2

# தங்க முலாம் துப்பாக்கி: இரு பெண்கள் கைது



ஹெவ்லொக் சிட்டி அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட T-56 ரக துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபரான பெண்ணும் மற்றுமொரு பெண்ணும் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெவ்லொக் சிட்டி அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள பாதுகாப்பு காவலர் ஒருவர், T56 துப்பாக்கியுடன் வந்த பெண்ணொருவரை வைத்திருப்பதாக, செவ்வாய்க்கிழமை (20) அன்று 119 என்ற அவசர தொலைபேசிக்கு தகவல் கொடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “வடக்கு உப்பு; வடக்குக்கு காலம் முடிந்து விட்டது”

வடக்கில் உற்பத்தி செய்யப்படும் உப்பு வடக்கிற்குத்தான் என்ற கோரிக்கைக்கு இடமளிக்க முடியாது என தெரிவித்த உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க அந்த காலம் முடிவடைந்து விட்டது என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) அன்று பொது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட சுயேச்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



## வடக்கில் காணி சுவீகரிப்பு வர்த்தமானி

# வெள்ளியன்று பேச்சு

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை பாராளுமன்றத்தில் தனது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அழைப்பில் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் காணிகளை நிர்ணயம் செய்வதற்காக இலக்கம் 2430 மற்றும் (28.05.2025) திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அந்த மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணி நிர்ணயம் தொடர்பாக பிணக்குகள் எழுந்துள்ளன. குறித்துக் கலந்துரையாடுவதற்காக 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை பாராளுமன்றத்தின் குழு அறை 01 இல் எனது தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு உங்களது பங்கேற்பினை மிகவும் கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன்" என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரைக் குடியேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த மற்றும் ரணில் ஆகியோரை பார்த்த கோணத்தில் எங்களைப் பார்க்காதீர்கள், தேசிய நல்லிணக்கத்தை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். மக்களின் காணிகளை சுவீகரிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்கள் எம்முடன் இருக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில், நாங்கள் ஏன் வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் செயற்பட வேண்டும்,? இந்த வர்த்தமானி தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் பல விடயங்களை முன்வைத்துள்ளார்கள்.தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரைக் குடியேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

காணி பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு 9 மாகாணங்களையும் வரையறுத்து இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமாகப் பிரசுரிக்கப்படவில்லை. காணி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் காணி அமைச்சு மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு ஒன்றிணைந்து கூட்டுப் பத்திரத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது எனக் கூறியுள்ளார்.

## தரம்-3 மாணவி விபத்தில் பலி

இருப்பினும் இந்தப் பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் எவரும் குறித்த நேரத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை.

கொக்கிளாய் மற்றும், கருநாட்டுக்கேணிப் பகுதியிலிருந்து மீன் ஏற்றிச்செல்கின்ற வாகனங்கள் எப்போதும் வேகக் கட்டுப்பாடின்றி மிக வேகமாகச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொக்கிளாய் பொலிஸார் இதுதொடர்பில் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதில்லை எனவும் மக்கள் முறையிடுகின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பாகவும் இவ்வாறு மீன் ஏற்றிச்செல்கின்ற தென்னிலங்கைப் பகுதியைச்சேர்ந்த வாகனமொன்று கொக்குத்தொடுவாய் பாடசாலைக்கு அண்மையில் மாணவன் ஒருவன்மீது மோதியதில் குறித்த மாணவன் உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கெஹெலியவின் மகனுக்கு விளக்கமறியல்

இவ்வாறு சந்தேகநபராகப் பெயரிடப்பட்ட நிலையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரமித் ரம்புக்வெல்லவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன்படி, ரமித் ரம்புக்வெல்ல புதன்கிழமை (21) காலை இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையான நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ரமித் ரம்புக்வெல்லவை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில், அவரை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி, புதன்கிழமை (21) அன்று உத்தரவிட்டுள்ளார்.



## நாமலுக்கு எதிரான கிரிஷ் வழக்குக்கு முன் விசாரணை திகதி

கிரிஷ் நிறுவனத்திற்குச் சொந்தமான ரூ.70 மில்லியனை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் தொடர்ந்தார்.

இலங்கையில் ரக்பி மேம்பாட்டிற்காக இந்திய ரியல் எஸ்டேட் நிறுவனமான கிரிஷ் லங்கா பிரைவேட் லிமிடெட் வழங்கிய ரூ.70 மில்லியனை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறி, குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தம்பியை அரிவாளால் கொடூரமாக பலமுறை குத்திய அண்ணன் கைது

அப்போது, பதுளை பிரதான பேருந்து நிலையத்தில் பணியில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் உடனடியாக சம்பவ இடத்திற்குப் பாய்ந்து சென்று, சந்தேக நபரை (அண்ணனுடன்) மடக்கி பிடித்து அவரை அடக்கி, கத்தியை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர்.

சம்பவ இடத்தில் இருந்த இரண்டு இளைஞர்களும் பொலிஸாருக்கு உதவினர். அருகிலிருந்த சிலர் சந்தேக நபரைத் தாக்க முயன்ற போதிலும், இந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் யாருக்கும் அதற்கான வாய்ப்பை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காயமடைந்த நபர் பலரின் உதவியுடன் முச்சக்கர வண்டியில் பதுளை போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். சந்தேக நபர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தனது தம்பி கத்தியால் இரண்டு முறை தன்னை குத்தியபோது, அதை பறித்து தனது தம்பியை தாக்கியதாக தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது தம்பி மீதான தாக்குதலின் போது, சந்தேக நபருக்கும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் பதுளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் ஒரே வார்டில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சந்தேக நபரின் மூத்த சகோதரர் பொலிஸ் காவலில் இருப்பதால், அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுக்கு இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்பட்டு, கைகலப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தம்பி, அண்ணவை இன்றைக்கு சில மாதங்களுக்கு முன்னர் கத்தியால் நெஞ்சில் குத்தியதில், அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, ஆறு மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன"

"இதில் அரைவாசி வெற்றிடங்களையாவது இந்த வருட நடுப்பகுதியாகும்போது, நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

மேலும், தரம் 1 முதல் தரம் 6 வரை சிங்கள மொழி மூலம் 4,240 ஆசிரியர் வெற்றிடங்களும் தமிழ் மொழி மூலம் 2,827 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

அதேபோன்று அரச பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 11 வரையில் சிங்கள மொழி மூலம் 11,274 ஆசிரியர் வெற்றிடங்களும் தமிழ் மொழி மூலம் 6,121 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

மேல் மாகாணத்தில் தரம் 1 முதல் தரம் 6 வரை சிங்கள மொழி மூலம் 1,318 ஆசிரியர் வெற்றிடங்களும் தமிழ் மொழி மூலம் 1,325 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

தரம் 6 முதல் தரம் 11 வரையில் சிங்கள மொழி மூலம் 302 ஆசிரியர் வெற்றிடங்களும் தமிழ் மொழி மூலம் 397 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

கொழும்பு கல்வி வலயத்தில் தரம் 1 முதல் தரம் 6 வரை சிங்கள மொழி மூலம் 84 ஆசிரியர் வெற்றிடங்களும், தமிழ் மொழி மூலம் 85 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

தரம் 6 முதல் தரம் 11 வரையில் சிங்கள மொழி மூலம் 226 ஆசிரியர் வெற்றிடங்களும், தமிழ் மொழி மூலம் 140 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

எனவே, இந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2020, 2022 தேசிய போதனா விஞ்ஞான குழுவில் டிப்ளோமா தாரிகளுக்கு 2025,5,02ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் அவர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையில் 3ஆம் தரத்துக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம், ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு இருக்கும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கை முடிவடைந்ததுடன் அதனையும் மேற்கொள்வோம்.

பெருந்தோட்டங்களில் தமிழ் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு போட்டிப்பரீட்சை நடத்தத் திட்டமிட்டிருந்த நிலையில், அதற்கு எதிராக விதிக்கப்பட்ட நீதிமன்ற இடைக்காலத் தடை காரணமாக அந்த நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை முடிவடையும் வரைக்கும் அதுதொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது.

என்றாலும், நாடு முழுவதும் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்றார்.



## "உப்புக்கு தீர்வு"

ஆகவே உப்பு உற்பத்தி வழமைக்குத் திரும்பும் வரையில் குறுகிய கால அடிப்படையில் உப்பு இறக்குமதிக்குத் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

போதுமான அளவு உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உப்பு தட்டுப்பாட்டுக்கு இவ்வாரத்துடன் தீர்வு எட்டப்படும். எனவே அரசியல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் பிறிதொரு விடயத்தை உடனடியாகத் தேடிக்கொள்ள வேண்டும் என்றார்.

## "வடக்கு உப்பு; வடக்குக்கு காலம் முடிந்து விட்டது"

ஆனையிறவு உப்பளத்தில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகள் பற்றி 27/ 2 கீழ் கேள்வியெழுப்பக் கோரியிருந்தேன். ஆனால், எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனையிறவு உப்பளத்தின் சேவையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அங்குப் பல பிரச்சினைகள் உள்ளன. பிரச்சினைகள் ஏதும் இல்லை என்று அமைச்சர் பொய்யுரைக்கிறார். இந்த பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு இடமளியுங்கள் என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த அமைச்சர் வசந்த சமரவிங்க,

"பிரச்சினையொன்றுமில்லை. போராட்டத்தின் ஊடாக பரந்தன் பகுதியில் பிறிதொரு பிரச்சினையைத் தோற்றுவிக்க முயற்சித்தார்கள். வடக்கில் உற்பத்தி செய்யப்படும் உப்பு வடக்கிற்குத்தான், தெற்குக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று குறிப்பிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள்" என்றார்.

"இதற்கு ஒருபோதும். இடமளிக்க முடியாது.இவ்வாறான நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தெற்கின் பொருள் வடக்குக்கு செல்லும், வடக்கின் பொருள் தெற்குக்கு வரும் ,இது ஒரு நாடு. இலங்கை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். வடக்கின் உற்பத்தி பொருட்களை தெற்குக்குக் கொண்டு வர வேண்டாம் என்று எவரேனும் போராட்டத்தில் ஈடுபட்டால் அதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம்.முழு நாடும் ஒன்று என்ற மனநிலையில் இருந்து கொண்டு செயற்படுங்கள். மக்களைத் தூண்டிவிட வேண்டாம் என்றார்.

### இலங்கையில் இருந்து

## "4,600 சுகாதார நிபுணர்கள் குடிபெயர்ந்துள்ளனர்"

சுமார் 4,600க்கும் மேற்பட்ட இலங்கை சுகாதார நிபுணர்கள், வெளிநாடுகளுக்கு 2022ஆம் ஆண்டுக்கும் 2025க்கு இடையில் குடிபெயர்ந்துள்ளனர் என சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் (WHO) 78ஆவது வருடாந்திர உலக சுகாதார மாநாட்டில் உரையாற்றியபோதே போது தெரிவித்தார்.

உலகம் முழுவதிலுமிருந்து வந்த பிரதிநிதிகள் முன் பேசிய அமைச்சர் ஜயதிஸ்ஸ,

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளவர்களில் 726 ஆலோசகர்கள், 1,116 மருத்துவ அதிகாரிகள் மற்றும் கிட்டத்தட்ட 2,800 செவிலியர் அதிகாரிகள் அடங்குவர்.

நமது சொந்த சுகாதார நிபுணர்களை உருவாக்க முதலீடு செய்த பிறகு இலங்கை குறிப்பிடத்தக்க நிதி இழப்புகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

பயிற்சி பெற்ற மருத்துவ ஊழியர்களின் இடம்பெயர்வு ஒரு தேசிய கவலை மட்டுமல்ல, உலகளாவிய கவலையாகும் என்றார்.

சுகாதாரப் பணியாளர் இடம்பெயர்வு உலகளாவிய ஆரோக்கியத்தை பாதிக்கும். அவற்றால் ஏற்படும் கவலைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார்.

## "மீறினால் கடும் நடவடிக்கை"



கட்சித் தலைவர்கள் நிலையியற் கட்டளைகளை மீறி கேள்விகளை எழுப்பியுள்ளதால், நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் எழுப்பப்படும் கேள்விகள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை பின்பற்றப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன புதன்கிழமை (21) அன்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மேலும், "எதிர்க்கட்சித் தலைவரும் கட்சித் தலைவர்களும் சமீபத்தில் எழுப்பிய சில கேள்விகள் வாய்மொழி கேள்விகள் அல்லது ஒத்திவைப்பு நேரத்தில் கேள்விகள் வடிவில் எழுப்பப்பட்டிருக்கலாம்.

கட்சித் தலைவர்கள் சமீபத்தில் கூடுதல் கேள்விகளை எழுப்புவதன் மூலம் நிலையியற் கட்டளைகளை மீறியுள்ளனர். எனவே, நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் உள்ள கேள்விகள் நிலையியற் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்," என்றும் சபாநாயகர் கூறினார்.

## தங்க முலாம் துப்பாக்கி: இரு பெண்கள் கைது

காரில் வந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 68 வயதுடைய பெண் ஒருவர் குடியிருப்புக்குத் துப்பாக்கியைக் கொண்டு வந்தபோது, அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தின் தனியார் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி, அந்தப் பெண் கொண்டு வந்த பயணப் பையை சோதனைக்கு உட்படுத்திய போது, அதில் துப்பாக்கி இருப்பதைக் கண்டு, அப்பெண்ணைத் தடுத்து வைத்துக்கொண்டு பொலிஸூக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஸ்தலத்துக்கு விரைந்த வெள்ளவத்தை பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கியை கைப்பற்றியதுடன், பெண்கள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

# "மன்னார் தீவு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது"

எஸ்.ஆர்.லெம்பேட்

"மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. மன்னார் தீவு வேகமாக அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்கு அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல தொழில் நிறுவனங்களும் முன் நின்று செயல்பட்டு வருகிறது. இதற்கு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது"



என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் புதன்கிழமை (21) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்களின் எவ்வித அனுமதியும் இன்றி கனிய மணல் அகழ்வு நடவடிக்கை மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறித்த நடவடிக்கைகளுக்காக மக்களினுடைய காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுவதனையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் செயல்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் மக்களினுடைய வாழ்வாதாரமும்,எதிர்காலமும் பாதிக்கப்படும் என சூழலியலாளர்கள் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். எனினும் மக்களின் எதிர்கால பிரச்சனைகளை உள்வாங்காமல்,அரச திணைக்களங்களின் ஆதரவுடன் பல நிறுவனங்கள் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது.

மக்களை அழிவிலிருந்து காப்பாற்றாது,இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படும் பல தேசிய நிறுவனங்கள் மக்களின் வாழ்விடங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு வருகின்ற எந்த நிறுவனங்களுக்கும் மக்கள் எவ்வித உதவிகளையும் வழங்க வேண்டாம். இரண்டு கனிய மணல் அகழ்வு நிறுவனங்களும்,மூன்று காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களும், மன்னார் மக்களுக்கு எதிராக மிக வேகமாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நிறுவனங்கள் பலரைப் பணம் கொடுத்து வாங்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளனர்.ஏழ்மை நிலையில் உள்ள மக்களையும் ஏமாற்றி மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தாம் கை கொடுப்பதாகக் கூறி மக்களை இ திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் அவர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளது.

மேலும், மக்களின் காணிகளை அதிகப் பணம் கொடுத்து வாங்கி காணியை தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு வாழ்விடங்களைப் பறிக்கும் ஒரு நிலையையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகப் போராட முன் வர வேண்டும். மக்கள் குறித்த திட்டங்களுக்கு ஒரு போதும் அனுமதி வழங்கக் கூடாது என கேட்டுக் கொள்ளுகின்றேன்" என தெரிவித்தார் .

# இரத்த வாந்தி எடுத்து குடும்பஸ்தர் மரணம்

எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (20) அன்று இரத்த வாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த தங்கவேலு கலைச்செல்வன் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மது மற்றும் புகைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் உடல் சுகவீனம் ஏற்பட்டு இரத்த வாந்தி எடுத்ததாகவும் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அன்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். சாட்சியங்களை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

மேலும் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மாந்தை கிராமத்தில் 27 குடும்பங்களுக்கு

# காணி அனுமதி

எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள திருக்கேதீஸ்வர கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த மாந்தை கிராமத்தில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு காணி அனுமதி பத்திரம் செவ்வாய்க்கிழமை (20) அன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் மாந்தையில் இடம்பெற்ற குறித்த காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ,மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) தமா. சிறிஸ்கந்தராஜா மற்றும் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர் கிராம மட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், பொது மக்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

குறித்த 27 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரங்கள் நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருந்த நிலையில், அரச சட்ட திட்டங்களுக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சங்கிலிய மன்னனுக்கு அஞ்சலி

எஸ்.தில்லைநாதன்



யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த இரண்டாம் சங்கிலிய மன்னனின் 406ஆவது நினைவு தினம், செவ்வாய்க்கிழமை (20) காலை யாழ்ப்பாணம் நல்லூரில் நினைவு கூரப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி செம்மணிச் சந்தியில் உள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இரண்டாம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிவசேனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய ஆதீன கர்த்தா சுந்தரேஸ்வரக் குருக்கள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி நாகராஜன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் பங்கேற்று, அஞ்சலி செலுத்தினர்.



# அசைவ உணவகத்தை மூடுமாறு ஆர்ப்பாட்டம்






நிதர்ஷன் வினோத்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி சைவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை(20) அன்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பேரணி ஆரம்பிக்கப்பட்டு யாழ். மாநகர சபை வரை சென்று நிறைவடைந்தது.

மேலும் குறித்த அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களடங்கிய மகஜர் யாழ். மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் புதன்கிழமை(21) கையளிக்கப்பட்டது.

ஆலய பக்தர் ஒருவரின் தன்னார்வ முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையில் 450ற்கும் மேற்பட்டவர்கள் தமது கையொப்பங்களைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், நல்லூர் பிரதேச செயலாளர், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கும் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 16 துவிச்சக்கர வண்டிகளுடன் ஒருவர் கைது

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணத்தில் நீண்ட நாட்களாக பல்வேறு துவிச்சக்கர வண்டிகளின் திருடி வந்த சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (20) அன்று கைது செய்யப்பட்டார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க ஒருவரே யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது 16 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டதுடன், மேலும் ஒரு துவிச்சக்கர வண்டியும் அவரது உடமையில் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக நடத்தப்பட்ட விசாரணைகளின் போது

சில மாதங்களாக நல்லூர், யாழ். நகர பகுதி, கே.கே.எஸ். வீதி போன்ற இடங்களிலிருந்து திருடப்பட்ட , ஆண்கள் பயன்படுத்தும் ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் பெண்கள் பயன்படுத்தும் 11 துவிச்சக்கர வண்டிகளும் என 16 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

துவிச்சக்கரவண்டிகளை தொலைத்த உரிமையாளர்கள் இருப்பின் தகுந்த அடையாளங்களைக் காண்பித்து துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்தனர்.

# கிருமித் தொற்றினால் இளம் குடும்பஸ்தர் பலி

எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணத்தில் கிருமித் தொற்றினால் இளம் குடும்பஸ்தரான தவில் வித்துவான் ஒருவர் திங்கட்கிழமை (19) உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த நாகையா நிரோஜன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த 17ஆம் திகதி உடல் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# தேயிலை தினத்தையொட்டி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்













ரஞ்சித் ராஜபக்ஷ, துவாரகஷான்

சர்வதேச தேயிலை தினத்தையொட்டி தொழிலாளர் உரிமைகளைக் கோரி நுவரெலியா மாநகர சபை கட்டிடத்தின் முன் தோட்டத் தொழிலாளர்கள் குழு ஒன்று புதன்கிழமை(21), ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கண்டிப் பகுதியில் செயல்படும் ஒரு அரசு சாரா அமைப்பால், பல ஆர்வலர்கள் மற்றும் தோட்டத் தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

"தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செய்திருந்தாலும், அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்க இதுவரை யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகிறது, தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை ரூ. 1700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும். என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியுடன் கூடிய ஒற்றை வீட்டுத்திட்டம் கட்டி தரப்பட வேண்டும், பொருளாதார நிலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், சிறுவர்களின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நுவரெலியா ரேஸ்கோர்ஸ் மைதானம் அருகே இருந்து நுவரெலியா நகரசபை கட்டிடம் வரை, எதிர்ப்பு பதாகைகளை ஏந்தி பேரணியாகச் சென்று அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.


## வீடு விற்பனைக்கு

கல்கிஸ்சை டெம்ப்ளர்ஸ் வீதியில், 2 மாடி வீடு விற்பனைக்கு

- 3 A/C படுக்கையறைகள்
- 3 குளியலறைகள்
- வரவேற்பறை மற்றும் சாப்பாட்டு அறை
- முழுமையாக பொருத்தப்பட்ட பேன்ட்ரி
- தொலைக்காட்சி ஓய்வறை
- சூடான தண்ணீர்
- முழுமையாக டைல்ஸ் பதிக்கப்பட்ட தரைகள்
- நிலப்பரப்பு தோட்டம்

15 பேர்ச் நிலம் / தெளிவான தரைகள் / அனைத்து வசதிகளும் / கல்கிஸ்சை சந்திக்கு 5 நிமிட நடை / 20 அடி அணுகல் சாலை / உயர் குடியிருப்பு பகுதி

தொடர்புக்கு:– 0762 657 717

# ஆடைத் தொழில்துறையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்

இலங்கைக்கு டொலர்களை ஈட்டித் தரும் முக்கிய ஏற்றுமதித் தொழில்களில் ஒன்றான ஆடைத் தொழில் நெருக்கடியில் உள்ளது. சில தொழிற்சாலைகள் பகுதியளவில் மூடப்படுகின்றன. ஒருசில ஆடைத்தொழிற்சாலைகள் முழுமையாக மூடப்படுகின்றன. இதனால், அங்கு பணியாற்றிய பலரும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரிய ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதாகவும், ஏற்றுமதியாளர்களின் இலாபத்தின் மீது அரசாங்கம் 30% வரி விதித்ததாலும், மின்சாரச் செலவுகள் 160% அதிகரித்ததாலும் ஆடைத் தொழில் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும் தொழிலதிபர்கள் சமீபத்தில் கூறியிருந்தனர்.

இதுவரை, ஏற்றுமதியாளர்களுக்கு 14% சலுகை வரி விதிக்கப்பட்டது. இது இப்போது லாபத்தில் 30% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள துறைமுக மற்றும் விமான வரிக்கு கூடுதலாக, மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு கூடுதலாக 2.5% வரி விதிக்கப்படுகிறது, மேலும் அந்த வரி இலங்கையிலிருந்து வாங்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் கூடுதல் வரியாக சேர்க்கப்படுகிறது.

“குறைந்தது 40 சிறு மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் இப்போது மூடப்பட்டுள்ளன பெரிய அளவிலான தொழிற்சாலைகளும் படிப்படியாக மூடப்படுகின்றன. அவர்களின் சில கிளைகள் மூடப்பட்டு, ஊழியர்கள் வேறு தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு தொழில் புரிந்த சாதாரண மக்கள் மட்டுமன்றி, அவர்களைத் தங்கிவாழ்வோரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர்.

கட்டுநாயக்கவில் இயங்கி நெக்ஸ்ட் என்ற ஆடைத் தொழிற்சாலை, புதன்கிழமையுடன் மே.20 மூடப்பட்டது. 1978 முதல் செயல்பட்டு வரும் இந்த தொழிற்சாலை, இங்கிலாந்தில் ஒரு முதலீட்டுத் திட்டமாகும். அங்கு உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக அதன் ஊழியர்கள் கூறுகின்றனர். இலங்கையில் தற்போதைய உற்பத்தி செலவுகள் இனி நிலையானதாக இல்லாததால், இந்த தொழிற்சாலையை மூட முடிவு செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகம் ஊழியர்களுக்கு வழங்கிய ஆவணத்தில் தெரிவித்துள்ளது.

இன்னும் பல நிறுவனங்களில் ஊழியர்களைக் குறைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. புதிய ஊழியர்களை இணைத்துக்கொள்ளும் முறை கைவிடப்பட்டுள்ளது. இருக்கும் பணியாளர்களை வைத்து, இரண்டு, மூன்று நபர்களின் வேலைகளை செய்வித்துக்கொள்கின்றனர்.

ஒரு ஆடை தொழிற்சாலை மூடப்படுவதால், அங்கு பணியாற்றியவர்கள் மட்டுமன்றி, அவர்களைத் தங்கி வாழ்வோரும், அந்த தொழிற்சாலைக்கு அண்மையிலிருந்த சிறுசிறு வர்த்த நிறுவனங்களை நடத்திவந்தவர்களும், பணியாளர்கள் தங்குவதற்காகத் தங்குமிட வசதிகளை வழங்கியவர்கள் உள்ளிட்ட பலரும் பாதிக்கப்படுகின்றனர். பொருளாதார ரீதியில் கடுமையான பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர்.

2024ஆம் ஆண்டு புள்ளி விபரவியலின் அடிப்படையில், இலங்கையில் ஆடைத் தொழில் நேரடியாக சுமார் 300,000 முதல் 350,000 தொழிலாளர்களைப் பணியாற்றுகின்றனர். 350,000 பேர் மறைமுகமாகப் பணியமர்த்தப்பட்டனர்.

இந்தத் தொழில், குறிப்பாகப் பெண்களுக்கு, ஒரு முக்கிய வேலைவாய்ப்பு ஆதாரமாக உள்ளது, அவர்கள் கிட்டத்தட்ட 70% பணியாளர்களைக் கொண்டுள்ளனர். 2023ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதியில் ஆடைத் துறை 40 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக் கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# தேர்தலில் அடைந்த வாக்கு வீழ்ச்சி

முருகானந்தம் தவம்

‘மாற்றங்களின் தலைவர்’ அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறி ஆறு மாதங்களாகி விட்டபோதும், நாட்டில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாத நிலையிலும் அவர்களின் ‘திசைகாட்டி’ தவறான திசை காட்டுவதனாலும், அனுரகுமார அரசுக்கான ஆதரவு பெரும் வீழ்ச்சியை நோக்கி வேகமாக சென்று கொண்டிருப்பதனை அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

கடந்த 2024 செப்டெம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி தலைவரான அனுரகுமார திசாநாயக்க 5,634,915 வாக்குகளைப் பெற்றிருந்தார். கடந்த 2024 நவம்பர் மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி 68,63,186 வாக்குகளைப்பெற்று 159 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. கடந்த 2025 மே மாதம் 6ஆம் திகதி நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பி. -தேசிய மக்கள் சக்தி தலைவரான அனுரகுமார திசாநாயக்க 5,634,915 வாக்குகளைப் பெற்றிருந்தார். கடந்த 2024 நவம்பர் மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி 6,863,186 வாக்குகளைப்பெற்று 159 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. கடந்த 2025 மே மாதம் 6ஆம் திகதி நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி 4,503,930 வாக்குகளையே பெற்றுக்கொண்டது.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் 5,634,915 வாக்குகளை பெற்றுக் கொண்ட ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அதன் பின்னரான பாராளுமன்றத் தேர்தலில் 1,228,271 வாக்குகளை அதிகமாகப் பெற்று 6,863,186 வாக்குகள் என்ற இமாலய வெற்றியைத் தனதாக்கியது. இவ்வாறான வெற்றிகள் தந்த அசட்டுத் தைரியத்தினாலும் அபரிமிதமான நம்பிக்கையாலும் இதை விடவும் பெரு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில் அரசு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்திய நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 1,130,985 வாக்குகள் குறைவாகவும் பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 2,359,256 வாக்குகள் குறைவாகவும் பெற்று தமக்கான மக்களின் ஆதரவில் சில மாதங்களுக்குள்ளேயே பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் 4,363,035 வாக்குகளைப் பெற்ற நிலையில், பாராளுமன்றத் தேர்தலில் 1,968,716 வாக்குகளைப் பெற்றது. இது ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விடவும் 2,394,319 வாக்குகள் குறைவாகும் அதேநேரம், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 2,258,480 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 289,764 வாக்குகள் அதிகம்.

அதேபோன்றே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பொதுஜன பெரமுன 342,781 வாக்குகளைப் பெற்ற நிலையில், பாராளுமன்றத் தேர்தலில் 350,420 வாக்குகளைப் பெற்றது. இது ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 7,639 வாக்குகள் அதிகம். அதேவேளை, நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 954,517 வாக்குகளைப் பெற்றுள்ளதன் மூலம் பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விடவும் 604,097 வாக்குகள் அதிகம்.

இக்கட்சியினைப் போன்றே திலித் ஜெயவீர தலைமையிலான சர்வஜன அதிகாரம் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலில் 122,390 வாக்குகளைப் பெற்றது. பாராளுமன்றத் தேர்தலில் 55,610 வாக்குகளை அதிகமாக்கி 178,006 வாக்குகளைப் பெற்றது. தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 294,681 வாக்குகளை பெற்றுள்ளது. இது ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 172,285 வாக்குகள் அதிகம்.சர்வஜன அதிகாரம் கட்சி தனது வாக்கு வங்கியை நடந்து முடிந்த 3 தேர்தல்களிலும் அதிகரித்துள்ளது.

தமிழ் தேசியக் கட்சிகளுக்கான வாக்குகளும் இம்முறை பெருமளவில் அதிகரித்துள்ளன. பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி 257,813 வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 307,657 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது 49,844 வாக்குகள் அதிகம். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்றத் தேர்தலில் 39,894 வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 70,944 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது 31,050 வாக்குகள் அதிகம். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தேர்தலில் 65,382 வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 89,177 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது 23,795 வாக்குகள் அதிகம்.

அதேவேளை, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டு 2,299,767 வாக்குகளைப் பெற்றது. பாராளுமன்றத் தேர்தலிலும் அதே பெயரில் போட்டியிட்ட நிலையில், 500,835 வாக்குகளைப் பெற்றது. நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியாக போட்டியிட்டு 66,234 வாக்குகளைப் பெற்றது. அதேபோன்று, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியாக தனித்துப் போட்டியிட்டு 488,406 வாக்குகளைப் பெற்றுள்ளது.

> **சர்வாதிகார ஆட்சிக்கு எதிரானவர்கள், மக்கள் விரோத ஆட்சியை மாற்றி அமைப்பவர்கள், ‘மாற்றம்’ ஏற்படுத்தப் போவார்கள், புதிய ‘திசைகாட்டி’கள் என்றெல்லாம் கூறி, ஆட்சிக்கு வந்த இந்த ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அடைந்த வாக்கு வீழ்ச்சியை அடுத்தே சர்வாதிகார, மக்கள் விரோத ஆட்சியை முன்னெடுக்கத் தலைப்பட்டுள்ளனர்**

ஆக நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அனுரகுமார அரசை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது வாக்கு வங்கியை அதிகரித்துள்ள நிலையில், ஆட்சியிலுள்ள ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தி மட்டும் தமது வாக்கு வங்கியில் பாரிய சரிவை, வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. இதனால்தான் அரசிலுள்ள சில வாய் வீச்சு விற்பன்னர்கள் தமது கட்சியின் வாக்கு வீழ்ச்சிக்கு நொண்டிச் சாட்டுக்களையும் வேடிக்கையான கதைகளையும் கூறுகின்றனர்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்ற வாக்குகள் தொடர்பில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க கூறுகையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாரத்தின் வேலை நாளில் நடைபெற்ற காரணத்தினாலேயே வாக்களிப்பு வீதம் குறைந்தது. மேலும், சிங்கள தமிழ்ப் புத்தாண்டு காலம் மற்றும் வெசாக் பண்டிகை காலம் போன்ற காரணிகளும் அரசாங்கத்திற்கு வாக்களித்தவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சியில் தாக்கம் செலுத்தியது.எனவே, மக்கள் அரசாங்கம் மீது அதிருப்தி கொண்டுள்ளதாகக் கூறப்படும் கருத்துக்களில் உண்மையில்லை என்கின்றார்.

இவரின் கூற்றுப்படி, அரச ஊழியர்கள் அனைவரும் ஆளும் ஜே .வி.பி. தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் அவர்கள் வேலைக்குப் போனதால்தான் கட்சிக்கான வாக்களிப்பு குறைந்தது. அதேபோன்றே, சிங்கள தமிழ்ப் புத்தாண்டு காலம் மற்றும் வெசாக் பண்டிகை காலம் என்பவற்றையும் ஆளும் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் தான் கொண்டாடியுள்ளனர். அதனால்தான் அவர்கள் வாக்களிக்க வில்லை என்றவாறாகவேயுள்ளது. பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க கூறிய காரணங்கள் அனைத்துக் கட்சிகளுக்கும் பொருந்தும் என்பதையும் அவ்வாறான காரணங்கள் இருந்தும் எதிர்க்கட்சிகள் கடந்த கால தேர்தல்களைவிடவும் இந்த தேர்தலில் அதிக வாக்குகளைப்பெற்றுள்ளனர் என்பதனை இந்த ‘வாய் வீச்சு விற்பன்னர்கள்’ அறிந்தும் அறியாதவர்களாகவே பேசுகின்றனர்.

பிரதி அமைச்சர்தான் இவ்வாறென்றால் ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தி அரசின் பாராளுமன்ற சபை முதல்வராகவும் அமைச்சராகவுமுள்ள அடுத்த ‘வாய் வீச்சு விற்பன்னர்’ பிமல் ரத்னாயக்க ஒரு படி மேலே சென்று, “வடக்கில் நாங்கள் இல்லாமல் போயுள்ளோம் என்று கூறுகின்றனர். வன்னி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி வாக்காளர்களுக்கு கசிப்பு விநியோகித்தது. பணமும் கொடுத்தது. பச்சையான இனவாதத்தை முன்னெடுத்தது. இதனை பொறுப்புடன் கூறுகின்றேன்” என பொறுப்பில்லாமல் குற்றம் சாட்டி விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற கதையைக் கூறுகின்றார்.

அதுமட்டுமன்றி, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறைமையால் தாம் வெற்றி பெற்றிருந்தாலும், பல இடங்களில் ஆட்சியமைப்பதில் சிக்கல் இருப்பதால்தான் “தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ள உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சிகள் ஏதேனும் முறையில் ஆட்சியமைப்பார்களாக இருந்தால் மத்திய அரசாங்கத்தினால் அவ்வாறான சபைகளுக்கு நிதி வழங்கப்படாது” என்று அமைச்சர்களும், ”உள்ளூராட்சி சபைகளில் கிடைத்துள்ள மக்கள் ஆணைக்கு எதிராக சவால் விடுக்கும் வகையில் எவராவது செயற்படுவாராக இருந்தால் நாங்கள் பாராளுமன்ற மற்றும் அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவோம்” என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் எச்சரிக்கின்றனர்.

சர்வாதிகார ஆட்சிக்கு எதிரானவர்கள், மக்கள் விரோத ஆட்சியை மாற்றி அமைப்பவர்கள், ‘மாற்றம்’ ஏற்படுத்தப் போவார்கள், புதிய ‘திசைகாட்டி’கள் என்றெல்லாம் கூறி, ஆட்சிக்கு வந்த இந்த ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அடைந்த வாக்கு வீழ்ச்சியை அடுத்தே சர்வாதிகார, மக்கள் விரோத ஆட்சியை முன்னெடுக்கத் தலைப்பட்டுள்ளனர்.

## கடிதங்கள்

### வீதியை புனரமைப்பது யார்?

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையிலான கரையோர பாதையினை பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தி வருகின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கரையோர பாதையானது பாண்டிருப்பு எல்லை வீதி , கரையோர வீதியுடன் இணையும் பகுதியில் இருந்து குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் இவ்வீதியில் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இது தவிர இவ்வீதி ஊடாக அன்றாடம் அரச ஊழியர்கள் தனியார் ஊழியர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பயணம் செய்வதை காணக்கூடியதாக இருக்கின்றது

மழை காலங்களில் இவ்வீதி சேறும் சகதியுமாக காணப்படுவதனால் இவ்வீதியில் செல்கின்ற மீனவர்கள் பல்வேறு விபத்துகளுக்கு முகம் கொடுப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்

– பாறுக் ஷிஹான்





# உற்சாக பானமே தேநீர்

## மே.21 சர்வதேச தேயிலை தினம்

காலையில் ஒரு கப் டீ இல்லாமல் ஒரு சிலருக்கு நாளே ஓடாது. உலகின் பல்வேறு பகுதிகளில் பலர் தேநீர் பிரியர்களாக உள்ளனர். தேநீர் என்பது பல வீடுகளில் மாலையிலும், காலையில் ஒரு முறையும் கட்டாயம் குடிக்க வேண்டிய பானமாக மாறிவிட்டது. உள்ளத்தையும், உடலையும் உற்சாகமாக வைக்கின்ற உற்சாக பானம் தான் தேநீர். உள்ளூர் தொடங்கி உலக லெவலில் பிரசித்தி பெற்ற பானம் இது.

ஐக்கிய நாடுகள் சபையின் படி, ஆண்டுதோறும் மே 21 அன்று சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்படுகிறது.

தேநீர் என்பது கேமிலியா சினேசிஸ் தாவரத்தில் இருந்து தயாரிக்கப்படும் ஒரு பானமாகும். தண்ணீருக்கு அடுத்தபடியாக உலகில் அதிகம் உட்கொள்ளும் பானம் தேநீர். தேநீர் நீண்ட காலமாக எங்களுடன் உள்ளது. 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் தேநீர் அருந்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

> **மன அழுத்தத்தை போக்கும் அருமருந்தாக தேநீர் போற்றப்படுகிறது. அதற்கு காரணம் அதில் உள்ள கலவைகள் என சொல்லப்படுகிறது. பதட்டம், தலைவலி, மன அழுத்தம் போன்றவை ஒரு கோப்பை தேநீரை பருகினால் பறந்து போகும் என சொல்லப்படுகிறது**

தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளரும் நாடுகளில் மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது மற்றும் பல குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் மில்லியன் கணக்கான ஏழைக் குடும்பங்களின் முக்கிய வாழ்வாதாரமாக உள்ளது.

தேயிலை தொழில் சில ஏழ்மையான நாடுகளுக்கு வருமானம் மற்றும் ஏற்றுமதி வருவாயின் முக்கிய ஆதாரமாக உள்ளது, மேலும் தொழிலாளர்-தீவிர துறையாக, குறிப்பாக தொலைதூர மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பகுதிகளில் வேலைகளை வழங்குகிறது. வளரும் நாடுகளில் கிராமப்புற மேம்பாடு, வறுமைக் குறைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் தேயிலை குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது, இது மிக முக்கியமான பணப்பயிர்களில் ஒன்றாகும்.

தேயிலை நுகர்வு பானத்தின் அழற்சி எதிர்ப்பு, ஆக்ஸிஜனேற்ற மற்றும் எடை இழப்பு விளைவுகளால் ஆரோக்கிய நன்மைகளையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. இது பல சமூகங்களில் கலாசார முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

தனிநபர் நுகர்வு ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கும் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில், தேவையை விரிவுபடுத்துவதற்கான அதிக முயற்சிகளை இயக்குவதற்கு, தேயிலை மீதான அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவின் அழைப்பை மீண்டும் வலியுறுத்துவது மற்றும் பாரம்பரிய இறக்குமதி செய்யும் நாடுகளில் தனிநபர் நுகர்வு குறைந்து வருவதை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை ஆதரிப்பது, பொதுச் சபை மே 21ஐ சர்வதேச தேயிலை தினமாக அறிவிக்க முடிவு செய்தது.

சாமானியர்கள் தொடங்கி அனைத்து தரப்பு மக்களும் காலை, மாலை, பகல், இரவு என எந்நேரமும் தங்களை புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ள உதவும் எனர்ஜி டானிக் தான் தேநீர். இப்படி உடல், பொருள், ஆவி, கலாசாரம் என நம்மோடு பின்னிப்பிணைந்துள்ளது தேநீர். வீடு, அலுவலகம், நண்பர்கள் சந்திப்பு என எங்கு சென்றாலும் 'சூடா ஒரு டீ சொல்லுப்பா…' என ஒரு குரல் ஒலிக்கும். அந்த குரலை எல்லோரும் அன்றாடம் கடந்து கொண்டு தான் இருக்கிறோம். இப்படி ஸ்ட்ராங்கா, லைட்டா, மீடியமா, சர்க்கரை கம்மியா என தேநீர் குறித்த குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

### தேநீரின் வரலாறு:

தென்கிழக்கு ஆசியாவில் தான் தேநீர் உதயமாகி உள்ளது. ஏனெனில், இங்கு தான் தேயிலைகள் விளைந்துள்ளன. சரியாக வடகிழக்கு இந்தியா, வடக்கு பர்மா, தென்மேற்கு சீனா மற்றும் திபெத் ஆகிய பகுதிகளுக்கு இடையில் தான் தேயிலை முதன்முதலில் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஷாங் அரசாட்சி காலத்தில் தான் மருத்துவ ரீதியாக தேநீர் பருகும் வழக்கம் தொடங்கியுள்ளது. கால ஓட்டத்தில் அப்படியே படிப்படியாக உலகம் முழுவதும் தேயிலைகள் பயணித்துள்ளன. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கள் மூலமாக ஐரோப்பிய கண்டத்தில் நுழைந்துள்ளது. 17ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாட்டுக்குள் நுழைந்துள்ளது.

### தேநீரும் ஆரோக்கிய நன்மைகளும்

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் தேநீரை நிச்சயம் தங்கள் டயட்டில் சேர்க்க வேண்டும் என சொல்கிறார்கள் வல்லுநர்கள். இதில் உள்ள ஃபிளாவனாய்டு (Catechin) கொழுப்பை குறைக்க பெரிதும் உதவும் என சொல்லப்படுகிறது. உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் கிரீன் டீ பருகலாம் என வல்லுநர்கள் சொல்கின்றனர்.

'கிரீன்' மற்றும் 'பிளேக்' டீயில் காணப்படும் நுண்ணூட்டச்சத்துக்கள் உடலில் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன அழுத்தத்தை போக்கும் அருமருந்தாக தேநீர் போற்றப்படுகிறது. அதற்கு காரணம் அதில் உள்ள கலவைகள் என சொல்லப்படுகிறது. பதட்டம், தலைவலி, மன அழுத்தம் போன்றவை ஒரு கோப்பை தேநீரை பருகினால் பறந்து போகும் என சொல்லப்படுகிறது.

தேநீரில் உள்ள Tannin-கள் வயிறு சார்ந்த பிரச்சனைகளை களைய அதிகம் உதவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. Tannin குடல் அழற்சியை குறைக்க உதவுவது தான் இதற்கு காரணம் என சொல்லப்படுகிறது.

இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த தேநீர் பெருமளவு உதவுவதாக சொல்லப்படுகிறது. மாரடைப்பு உட்பட இருதய நோய் அபாயத்தை ஓரளவு குறைக்க இந்த பானம் உதவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






# விசாலம்

**சரவணபவன் ஆதவன்**

> **அவரின் கண்கள் அதீத ஒளியை பாய்ச்சிக் கொண்டிருந்தன. கண்களில் ஒளியா என்று தர்க்கரீதியான கேள்வி முதலில் எழுந்தது. சலனமற்ற பார்வைக்கு வலு இருப்பதாக உணர்ந்த போது வலுவின் வடிவம் ஒளியில்லாத ஒளியாக எனக்குத் தோன்றியது. கூர்மையான ஆழத்துளைக்கும் ஒளி. நேர்ப் பாதையில் கண்களை தயக்கமின்றி சந்திக்கும் போது என்னுள் ஊடறுத்துப் பாய்ந்தது. நரம்பு மண்டலத்தின் வழியே பயணித்து முடிச்சுகளை அவிழ்த்தும் உடைத்தும் பிரவாகமாக உடலின் அனைத்து கலங்களிலும் ஊறி உறைந்தது.**

கோடி உடுக்கள் பூத்திருந்த எல்லையற்ற வானத்தின் கீழ் இருக்கிறேன்.

"மனம் வானம் போல விசாலமானது" என்று சித்தர் சொன்னார்.

"விசாலமானது எல்லைகள் அற்றதா?" இந்தக் கேள்வியை கேட்க வேண்டும் என்று தினம் அவரைச் சந்திக்கச் செல்வேன்.

ஒருவன் சித்தரிடம் போகிறான் என்றால் அவனுக்கு ஏதோ துயரம் என்று பொதுப்புத்தி உணரும்.

இரவில் கிடைக்கும் அமைதி முடிவற்றது என்ற முடிவை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. சம்சாரியாக இருக்கும் இந்த நாட்களில் முடிவற்ற மனக்கிலேசங்களுக்கு ஆட்பட்ட தருணங்களில் இங்கே வந்து விடுகிறேன். நிலவற்ற நாளில் வெள்ளிப்பூத்திருந்த வானக்கூரையின் கீழ் துளியாக அசைவற்று அமர்ந்திருக்கிறேன்.

வாழ்வின் குழப்பங்களை ஒவ்வொன்றாக ஓரங்கட்டிட விழைகிறேன். "நீ சம்பாதித்துப்போடுற இலட்ஷணத்தில், நாங்கள் சந்தோசமாக இருக்கிறம் எண்டு மட்டும் நினைக்காத. வீட்டுக்குப்போட ஒழுங்கான துணி மணி இல்ல. இரண்டு பிள்ளைகளும் குமராகிட்டுதுகள் பழசுகளை தோச்சுப் போட்டு காலம் கடத்த முடியாது" தினம் கேட்கும் அவளின் வசைகள் மன அடுக்குகளில் இருந்து ஒவ்வொன்றாக நழுவுவது போல இருந்தது. உழைப்பில்லாத ஊதாரியான எனக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க வசைகள். அவை எந்தவித குற்ற உணர்ச்சியையும் தரவில்லை. சிரித்துக் கடந்த காலங்கள் கடந்து விட்டன. குடும்பம் என்பது பொறுப்பு. பொறுப்புகளில் கூடாரம். சுதந்திரமற்ற சிறைவாசம் என்று உணர்த் தலைப்பட்டவுடனே சித்தரை நோக்கி வரத்தொடங்கினேன்.

"நீ தினம் குடித்தால் எப்படி மிச்சம் பிடிப்பது?" மண்டைக்குள் சுள்ளென்று ஏறும். குடி குடியைக்கெடுக்கும் என்ற பழமொழியை அடிக்கடி நினைவு படுத்துவாள். குடிப்பதால் எல்லாம் எம் கைகளைவிட்டுப்போவதாக எச்சரிப்பாள். நான் குடியை விடாமல் தொடர்ந்தேன். எச்சரிக்கைகளை புறந்தள்ளினேன். பணக்காரன் குடித்தால் நாகரீகம். ஏழை குடித்தால் ஊதாரி. பார்வையில் எவ்வளவு ஏற்றத்தாழ்வுகள். எனக்கான தர்க்கங்களை வைத்திருந்தேன். எனது அமைதியும் மகிழ்ச்சியும் சுருங்கிவருவதை உணர்ந்த தருணத்தில் இருக்கிறேன். எனது மனம் குறுகி விட்டது. எனக்கான வெளியில்லாமல் எல்லைகள் எண்ணங்களை மட்டுப்படுத்தி விட்டன.

வீடு என்று சொல்லிக்கொள்ளும் கொட்டில் மழைக்கு ஒழுகும். சட்டிகளும் சருவங்களும் அதை ஏந்தும். "இந்தப்பாவத்துக்கு உனக்கு நரகம் கிடைக்கும்" என்றாள்.

இன்றைக்கு மழையில்லை. அவர்கள் தொந்தரவில்லாமல் உறங்குவார்கள். அந்த உணர்வு கூட மட்டுப்படுத்தப்பட்ட மனதின் எல்லையே.

பொறுப்பற்றவனாக இருக்கிறேனா? இந்தச் சமூக ஒழுங்கு என்மேல் பாறாங்கல்லை வைத்து அழுத்துகிறது. இனி முடியாது என்ற முடிவுடன் வந்தேன்.

சித்தர் கண்களை திறந்து என்னைப் பார்த்தார்

அவரின் கண்கள் அதீத ஒளியை பாய்ச்சிக் கொண்டிருந்தன. கண்களில் ஒளியா என்று தர்க்கரீதியான கேள்வி முதலில் எழுந்தது. சலனமற்ற பார்வைக்கு வலு இருப்பதாக உணர்ந்த போது வலுவின் வடிவம் ஒளியில்லாத ஒளியாக எனக்குத் தோன்றியது. கூர்மையான ஆழத்துளைக்கும் ஒளி. நேர்ப் பாதையில் கண்களை தயக்கமின்றி சந்திக்கும் போது என்னுள் ஊடறுத்துப் பாய்ந்தது. நரம்பு மண்டலத்தின் வழியே பயணித்து முடிச்சுகளை அவிழ்த்தும் உடைத்தும் பிரவாகமாக உடலின் அனைத்து கலங்களிலும் ஊறி உறைந்தது. சருமங்களுக்குள் தாங்கிக் கொள்ளாத சக்தி உரோமங்களின் புடைப்பாக வெளிக்கிளம்பி எழுவதை தவிர்க்க முடியவில்லை. இரத்த ஓட்டம் பல மடங்கு பெருகி இதயத்தின் சுவர்களில் மோதி மோதிக் கொப்பளிக்கிறது. ஒருகணம் இதயம் நின்றுவிடுமோ என்ற அச்சம் இந்தக் கிளர்ச்சிகளையும் மீறி எனக்குள் எழுகிறது.

"நீ விசாலமானதை எண்ணிக் கொள். உனக்கு கட்டற்ற சுதந்திரம் கிடைப்பதாக நினை. என்ன நினைவில் வருகிறதோ அதை உடனே செய்ய வேண்டும்" தொடர்ந்து சித்தரின் சொற்கள் செவிகளில் விழும் ரீங்காரமாக என்னை உந்தித் தள்ளுகிறது. நான் கண்களை மூடிக் கொள்கிறேன்.

பாய்ந்த ஒளி என்னுள் சிறைப்பட்டு பல மடங்கு பெருகுவதை தடுக்க முடியவில்லை. குற்றங்கள் மன அழுக்குகள் எரிந்து ஒன்றுமில்லாமல் ஆகியது. மனது வெறுமையாக ஏதுவுமற்ற சூனியமாக நான் என்ற நான் இல்லாமல் போகிறேன். உணர்வுகள் செத்து விட்டன. உடலின் பாரம் எங்கோ மறைந்தது. நான் காற்றாகிவிட்டேன். எனக்கு காதுகள் இல்லாமல் வெறுமையாக ஒலியே கேட்காத தூய அமைதி விழுங்கிவிட்டது. சித்தர் கடைசியாக சொன்ன வார்த்தைகள் மட்டும் நினைவில் நிற்கிறது.

"நினைவில் என்ன வருகிறதோ அதை செய்" எதுவும் செய்யத் தோன்றவில்லை. அனைத்துமே மறந்த ஏகாந்த நிலையில் எதை செய்வது? ஒரு சிறு துளி விருப்பமும் இல்லாமல் இருந்தேன். மனம் சிந்தனையை விட்டு வெகுதூரம் சென்று விட்டது. சிந்திக்க எதுவுமற்ற மனம் குழப்பங்கள் அறவே இன்றி தெளிந்து கிடந்தது. மனம் விசாலமானதாக இருந்தால் எதுவும் செய்யத் தோன்றாதோ?

இதை விட்டு வெளியே வரத்தான் வேண்டுமா? எல்லையற்ற மனதுக்கு வேலி போடத்தான் வேண்டுமா? எதுவுமற்ற மனம் எவ்வளவு பெரியது. எல்லைகளற்றது.

"இப்போது என்ன நினைக்கிறாய்?" சித்தர் எனது மவுனத்தைக் கலைத்தார்.

"எதுவுமில்லை"

"நான் ஏதாவது சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?"

'இல்லை"

"இப்படியே இருந்து விடுவாயா?"

"ஆம்"

"நீ உருவாக்கி உண்டு கழித்து உவகைகொண்ட வாழ்க்கை இருக்கிறதே?"

"எதுவும் எனக்கு வேண்டாம்"

"சிற்றின்பங்களை விட்டு விட்டு அனைத்தையும் கடந்து போகவேண்டும்"

"ஆம்…"

"பொறுப்புகளை தட்டிக்கழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டாய். முட்டையிடும் பறவைகூட குஞ்சுகளுக்கு பாதுகாப்பு தேடுகிறது. அவைதானாக பறந்து செல்லும் வரையும்"

"அவற்றுக்கு மனிதனை விட அறிவு குறைவு. அறிவுள்ள நான் எதைப்பற்றியும் கரிசனை கொண்டு எனது சுதந்திரத்தையும் மனதின் விசாலத்தையும் இழக்க விரும்பவில்லை" என்றேன்.

"பாசத்தால் கட்டுண்ட பறவைகளுக்கு குறுகிய மனம் என்று நினைக்கிறாயா?" சித்தர் எனது கவனத்தைக் குழப்பும் வகையில் மீண்டும் மீண்டும் கேள்வி கேட்பது எரிச்சலைத் தருகிறது.

"எண்ணங்களால் வரும் உணர்ச்சிகளை களைந்த மனதில் எரிச்சலை தருகிறீர்கள். நீங்கள் என்னை அப்படியே விட்டு விடவேண்டும் குருவே" என்று மன்றாடினேன்.

"உனக்கான பொறுப்புகள் முடியவில்லை"

"பொறுப்புகள் இருந்தால் நான் சாமானியனாக வாழ்வில் உழன்று கொண்டிருக்க வேண்டிவருமே?"

"அப்படியில்லை. பொறுப்புகளோடு விசாலமாக மனதை வைத்திருப்பதற்கான பயிற்சியை நீ பெறவேண்டும்"

"எப்படி?"

"பறவைகள் எதைப்பற்றி சிந்திக்கும்?"

"அவை சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவை" என்றேன்.

"ஆகவே… அவற்றுக்கு எண்ணங்கள் இல்லாத வெற்றிடமான மனது இருக்குமா?"

சித்தரின் கேள்வி நகைப்பைத் தந்தது சிந்தனை இல்லாதவருக்கு எப்படி மனதிருக்கும் என்ற சந்தேகமும் எழுந்தது.

"பறவைகளுக்கு எப்படி மன திருக்கும் என்று நினைக்கிறாய் இல்லையா? அவற்றுக்கும் மனதிருக்கிறது. குஞ்சு இறந்தாலோ? யாராவது கவர்ந்து சென்றாலோ அடித்து விழுந்து கத்துகின்றதே. அப்படியென்றால் வேதனை என்ற உணர்வை வெளிப்படுத்துகின்றன. வேதனை, மகிழ்ச்சி, கோபம் இவைதானாக தூண்டுதலால் வருவதில்லை. சிந்தனையின் வெளிப்பாடுகள் என்றும் எடுத்துக்கொள்ளலாம்"

சித்தர் தொடர்ந்தார்,

"பறவைகளின் மனதில் ஏதும் இல்லாது வெற்றிடமாக இருக்கும். ஏதோ ஒரு சமயத்தில் உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு சரி. மற்ற நேரங்களில் அது எல்லையற்ற பரந்த மனதாக சிக்கல்கள் இல்லாத தூய மனதாக இருக்கும். நீ அப்படித்தான் இருக்க வேண்டும்" சித்தார் கூறி முடித்தார்.

"எண்ணங்களை காவக்கூடாது என்று சொல்கிறீர்கள்?"

அவரிடம்பதில் இல்லை.

கண்களை திறந்து பார்த்தேன். சித்தர் தனது கண்களை மூடியபடியே சாந்தமான முகத்துடன் தியானத்தில் இருந்தார்.

எழுந்து அவரை வணங்கினேன். வீட்டை நோக்கி நிதானமாக நடந்தேன். மேலே வானம் அப்படியே இருந்தது. வெள்ளிகள் தமது பிரகாசத்தை இழக்காமல் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

இன்று ஆரம்பமாகும் ஒற்றை டெஸ்ட்:

# இங்கிலாந்து சவாலளிக்குமா சிம்பாப்வே?



இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஒற்றை டெஸ்ட் போட்டியானது நொட்டிங்ஹாமில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் மலையும் மடுவும் போல இங்கிலாந்தும் சிம்பாப்வேயும் காணப்படுகின்ற நிலையில் சிம்பாப்வேயின் சிரேஷ்ட வீரர்களான கிறெய்க் எர்வின், ஷோன் வில்லியம்ஸ், சிகண்டர் ராசா பெரிய இனிங்ஸ்களை ஆடினால் பிளஸிங் முஸர்பனி, விக்டர் நயுச்சி, றிச்சர்ட் நகரவாவை உள்ளடக்கிய சிம்பாப்வேயின் வேகப்பந்துவீச்சுக் கூட்டணி இங்கிலாந்துக்கு சவாலையளிக்கலாம்.

மறுபக்கமாக இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் ஸக் குறோலி, ஒலி போப் ஆகியோர் ஓட்டங்களுக்குத் தடுமாறுகையில் தமதிடங்களை உறுதிப்படுத்துவதற்கான இறுதிச் சந்தர்ப்பங்களிலொன்றாக இப்போட்டி நோக்கப்படுகிறது.

இது தவிர கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட் ஆகியோர் காயமடைந்துள்ள நிலையில் குஸ் அட்கின்ஸன் தலைமையில் அணிக்கு மீளத் திரும்பியுள்ள ஜொஷ் டொங்க் மற்றும் அறிமுக வீரர் சாம் குக் ஆகியோருடனே இங்கிலாந்து களமிறங்குகிறது.



ஐ.பி.எல்:

## சென்னையை வீழ்த்தியது ராஜஸ்தான்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ராஜஸ்தான்

சென்னை: 187/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஆயுஷ் மாத்ரே 43 (20), டெவால்ட் பிறெவிஸ் 42 (25), ஷிவம் டுபே 39 (32) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆகாஷ் மத்வால் 3/29 [4], வனிது ஹசரங்க 1/27 [4], துஷார் தேஷபந்தே 1/33 [4])

ராஜஸ்தான்: 188/4 (17.1 ஓவ.) (துடுப்பாட்டம்: வைபவ் சூரியவன்ஷி 57 (33), சஞ்சு சாம்சன் 41 (31), யஷஸ்வி ஜைஸ்வால் 36 (19), துருவ் ஜுரேல் ஆ.இ 31 (12), ஷிம்றோன் ஹெட்மயர் ஆ.இ 12 (05) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்ஷுல் கம்போஜ் 1/21 [3])

போட்டியின் நாயகன்: ஆகாஷ் மத்வால்.

இந்நிலையில், அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்கிறது.



ஐ.பி.எல்: அசலங்க, பெயார்ஸ்டோ, கிளீசன்

## தற்காலிகப் பிரதியீடு

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), வில் ஜக்ஸ், றயான் றிக்கெல்டன், கோர்பின் போஷுக்கான தற்காலிகப் பிரதியீடுகளாக ஜொனி பெயார்ஸ்டோ, இங்கிலாந்தின் றிச்சர்ட் கிளீசன், சரித் அசலங்கவை மும்பை இந்தியன்ஸ் இணைத்துள்ளது.

தகுதிகாண் போட்டிகளுக்கு மும்பை தகுதி பெற்றால், பிரதியீட்டு வீரர்கள் அப்போட்டிகளிலிருந்து தெரிவுக்குத் தயாராக இருப்பர்.

## ஒப்பந்தத்தை நீடிக்கும் றபீனியா



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான றபீனியாவை கழகத்தில் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை வைத்திருக்கும் புதிய ஒப்பந்தம் தொடர்பாக அவருடன் பார்சிலோனா இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு பார்சிலோனாவில் இணைந்த 28 வயதான றபீனியாவின் பார்சிலோனாவுடனான ஒப்பந்தமானது எதிர்வரும் 2027ஆம் ஆண்டுடன் முடிவடைவதாக முன்னர் காணப்பட்டிருந்தது.

நடப்புப் பருவகாலத்தின் 56 போட்டிகளில் 34 கோல்களைப் பெற்ற றபீனியா, 25 கோல்களைப் பெறுவதற்கு உதவியிருந்தார்.

## லிவர்பூல் செல்லும் ஸ்கெவி சிமொன்ஸ்?




ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி. லெய்ப்ஸிக்கின் முன்களவீரரான ஸ்கெவி சிமொன்ஸைக் கைச்சாத்திடுவது குறித்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.

இன்னொரு பெண்டெலிஸ்கா கழகமான பயெர் லெவர்குசனின் மத்தியகளவீரரான புளோரியன் றிட்ஸையும் கைச்சாத்திட லிவர்பூல் முயல்கிற நிலையில் றிட்ஸைக் கைச்சாத்திடுவதை விட சிமொன்ஸைக் கைச்சாத்திடுவது இலாபம் என்று நோக்கப்படுகிறது.

ஆசியா

ஆசியாவில்

# மீண்டும் கொரோனா அலை



ஆசியாவில் மீண்டும் புதிய கொரோனா அலை உருவாகியுள்ளது. குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. தற்போது பரவி வரும் ஒமைக்ரான் பிஏ.2.86 திரிபான ஜேஎன்1 வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஹொங்கொங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் எடுக்கப்பட்ட மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, முக்கிய நகரங்களில் சுகாதாரத் துறையின் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மக்கள் புதிதாக கொரோனா பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன. ஹாங்காங்கில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது.

சமீபத்தில் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ததில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் விகிதம் இந்த ஆண்டில் உச்சபட்ச அளவை தொட்டுள்ளது என்று ஹாங்காங் சுகாதார பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் கடந்த மே 3ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்து 14,200 ஆக உள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை சுமார் 30 சதவீதம் உயர்ந்துள்ளது என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் பெரும்பாலும் 30-39 வயதினரிடம் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது. மே 17ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 33,030ஆக அதிகரித்துள்ளது.

முந்தைய வாரத்தில் பாதிப்பு எண்ணிக்கை 16,000ஆக இருந்த நிலையில், தற்போது இரட்டிப்பாகியுள்ளது என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

## இந்தியர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



"விசா முடிந்தும் வெளியேறாவிட்டால், நாடு கடத்தப் படுவீர்கள்" என இந்தியர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, விசா காலத்தை விட அதிகமாகத் தங்கியிருப்பது நாடுகடத்தலுக்கும், விசா முடிந்தும் வெளியேறாத இந்தியர்களுக்கு மீண்டும் அமெரிக்காவுக்கு வர நிரந்தர தடை விதிக்கப்படும் என்றும் அமெரிக்கா அரசு எச்சரித்துள்ளது.


இதுதொடர்பாக இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது எக்ஸ் வலைத்தளத்தில், "நீங்கள் (இந்தியர்கள்) அனுமதிக்கப்பட்ட தங்கியிருக்கும் காலத்திற்குப் பிறகும் அமெரிக்காவில் தங்கினால், நீங்கள் நாடு கடத்தப்படலாம், மேலும், எதிர்காலத்தில் அமெரிக்காவுக்குப் பயணம் செய்வதற்கு நிரந்தரத் தடையை எதிர்கொள்ள நேரிடும்" என்று பதிவிட்டுள்ளது.

அமெரிக்காவில் சட்டப்பூர்வமாக சுமார் 4.78 கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பணியாற்றி வரும் நிலையில், ட்ரம்பின் இந்த புதிய அறிவிப்பால் அங்கு வசித்து வரும் 45 இலட்சம் இந்தியர்களும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

வியட்நாம்

போலி ஊட்டச்சத்து

## விளம்பரத்தில் நடித்த அழகி கைது



போலி விளம்பரத்தில் நடித்ததற்காக வியட்நாமைச் சேர்ந்த அழகி நுயென் துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்து தலைநகர் பேங்கொக்கில் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச அழகிப் போட்டியில், வியட்நாமைச் சேர்ந்த நுயென் துக் வெற்றி பெற்று அழகி பட்டத்தைத் தட்டிச் சென்றார். இதனையடுத்து முன்னணி நிறுவனங்கள் பலவும் அவரை தங்களது விளம்பர தூதராக நியமித்தது.

அதன்படி வியட்நாமில் உள்ள ஒரு முன்னணி நிறுவனத்தின் ஊட்டச்சத்து மருந்தை நுயென் விளம்பரப்படுத்தினார்.

இதனை உண்மையென நம்பி 1 இலட்சத்துக்கும் அதிகமானோர் அந்த மருந்துகளை வாங்கி பயன்படுத்தினர். முன்னதாக அந்த மருந்தில் 200 மி.கி நார்ச்சத்து இருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால், ஆய்வகத்தில் நடத்திய சோதனையில் வெறும் 16 மி.கி. நார்ச்சத்து மட்டுமே இருப்பது உறுதியானது. இது பொதுமக்களிடையே பெரும் எதிர்ப்பை கிளப்பியது. இதனையடுத்து, அந்த மருந்துகளின் விற்பனைக்கு அங்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், தற்போது போலி விளம்பரத்தில் நடித்ததற்காக அழகி நுயென் துக் உட்பட 3 பேரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

மும்பை

மகாராஷ்டிராவில்

## கொரோனா பரவல்



மகாராஷ்டிராவில், தற்போது கொரோனா பாதிப்பு காரணமாக லேசான அறிகுறிகளுடன் 52 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதே நேரத்தில் 16 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அம்மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் மகாராஷ்டிராவில் கோவிட்-19 பாதிப்பு காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும், மகாராஷ்டிர மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இரண்டு பேரும் மும்பையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இணை நோய்களைக் கொண்டவர்கள். இறந்தவர்களில் ஒருவருக்கு ஹைபோக்ளைசீமியா வலிப்புடன் நெஃப்ரோடிக் நோய் இருந்தது. மற்றொருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர் ஆவர்

மகாராஷ்டிராவில் ஜனவரி முதல் மொத்தம் 6,066 ஸ்வாப் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டது. அவற்றில் 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவற்றில் 101 பேர் மும்பையைச் சேர்ந்தவர்கள், மீதமுள்ளவர்கள் புனே, தானே மற்றும் கோலாப்பூரைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்தியா

## "கொரோனா கட்டுப்பாட்டில்"

இந்தியாவில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டில் உள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மே 19ஆம் திகதி நிலவரப்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 257ஆக உள்ளது. நாட்டின் மக்கள்

தொகையைக் கருத்தில் கொள்ளும்போது, இது மிகமிக குறைவு. தவிர, இது சாதாரண பாதிப்புதான். எனவே, மருத்துவமனையில் அனுமதிக்க அவசியம் இல்லை. இருப்பினும், நிலைமையை மத்திய சுகாதார அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது எனவும் சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர்.

முக கவசம் அணியுமாறு சுகாதாரத் துறை அறிவுறுத்தல்:

பொதுமக்கள் பொது இடங்களில் முக கவசம் அணிவதுடன், சரியான தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தமிழக பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 22, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.